செ.வெ.எண்:12 நாள்:06.09.2019

# அம்மா இளைஞர் விளையாட்டு திட்டத்தின் மூலம் அம்மா இளைஞர் விளையாட்டு மையத்தில் சேர்வதற்கு இளைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் அழைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியத்தையும், மன வளத்தையும் மேம்படுத்தும் வகையில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் மூலம் அம்மா இளைஞர் விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு, கிராமப்புற இளைஞர்கள் விளையாட்டு மேம்பாட்டு துறையில் மேம்படுவதற்காக இத்திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

2019-20ஆம் ஆண்டிற்கு அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம் தொடர்பான அரியலூர் மாவட்டத்திலுள்ள 201 கிராமங்களிலும் 02 பேரூராட்சிகளிலும் அம்மா இளைஞர் மேம்பாட்டு மையம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக அமைக்கப்படவுள்ளது. இக்குழுவில் உறுப்பினராக சேர்வதற்கு 15 முதல் 35 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் உறுப்பினர்களாக சேரலாம். இந்த உறுப்பினர்களை கொண்டு அம்மா இளைஞர் விளையாட்டு குழு அமைக்கப்பட்டு விளையாட்டு பயிற்சி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் நோக்கம் இளைஞர்களிடையே தலைமைப் பண்பினை வளர்த்தல், கிராம இளைஞர்களிடம் கூட்டு மனப்பான்மையினை உருவாக்குதல், கிராமங்களில் உள்ள திறமையான இளைஞர்களை கண்டறிந்து அவர்களுக்கு முறையான பயிற்சி கொடுத்து அவர்களை உயர்மட்ட போட்டிகளில் சாதனை படைக்க வைத்தல், மேற்கண்ட நோக்கங்களுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் நடப்பு ஆண்டில் தமிழகத்தில் 12,524 கிராம ஊராட்சிகளில் மற்றும் 528 பேரூராட்சிகளில் ரூ.64 கோடியே 35 லட்சம் மதிப்பீட்டில் அம்மா இளைஞர் விளையாட்டு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்படும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கபடி, வாலிபால், கிரிக்கெட் அல்லது கால்பந்து ஆகிய விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு ஊராட்சி ஒன்றிய அளவிலான விளையாட்டு போட்டிகள் முதற்கட்டமாக நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுபவர்கள் மாவட்ட, மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கலாம். இத்திட்டத்தில் சேர ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்களது கிராமங்களிலுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தை அணுகி தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். மேலும், இது தொடர்பான விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அவர்களை 7401703499 மற்றும் கைப்பந்து பயிற்றுநர் 8667240846 ஆகிய தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம். மேலும், அம்மா இளைஞர் விளையாட்டு திட்டத்தில் இளைஞர்கள் திரளாக சேர்ந்து தங்களை விளையாட்டு துறையில் மேம்படுத்திக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**